



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. ஆகியோர்கள் முன்னிலையில், கோதையாறு பாசனத்திட்டத்திலிருந்து இராதாபுரம் கால்வாய்க்கு இன்று (21.09.2016) தண்ணீர் திறந்து வைத்து, மலர் தூவினார்கள். இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை எம்.எல்.ஏ., தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 656/2016 நாள்: 21.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், கோதையாறு பாசனத்திட்டத்திலிருந்து இராதாபுரம் கால்வாய்க்கு இன்று (21.09.2016) தண்ணீரை திறந்து வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. ஆகியோர்கள் முன்னிலையில், கோதையாறு பாசனத்திட்டத்திலிருந்து இராதாபுரம் கால்வாய்க்கு இன்று (21.09.2016) பிற்பகல் 1.40 மணிக்கு தண்ணீர் திறந்து வைத்து, மலர் தூவினார்கள்.

கோதையாறு பாசனத்திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்தில் அமைந்துள்ள இராதாபுரம் கால்வாயில், பாசனத்திற்காக வினாடிக்கு 75 கன அடி வீதம், 20 நாட்களுக்கு மொத்தம் 130 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், லெவிஞ்சிபுரம், கருங்குளம், பழவூர், அடங்கார்குளம், அழகனேரி, தனக்கர்குளம், கூடங்குளம், பரமேசுவரபுரம் மற்றும் இராதாபுரம் கிராமங்களை சார்ந்த 17,000 ஏக்கர் பாசனப்பரப்பில், நேரடி பாசனம் மூலம் சுமார் 15,980 ஏக்கர் பாசனப்பரப்பும், குளங்கள் மூலம் 1,020 ஏக்கர் பாசனப்பரப்பும் பாசன வசதி பெறும்.

நிகழ்ச்சியில் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை எம்.எல்.ஏ., தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், இணை இயக்குநர் (வேளாண்மை துறை) திரு. இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பொதுப்பணி துறை (நீர் ஆதார பிரிவு) செயற்பொறியாளர் சுப்பிரமணியன், உதவி பொறியாளர் சுபாஷ் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.